பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
18 06 2025 **WEDNESDAY** 6 30 **PM**
வணக்கம்-மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கனடாவில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி **Croatia** சென்றடைந்தார்.

2. **Fastag** அடிப்படையிலான வருடாந்திர அனுமதிச் சீட்டு, ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி முதல் வழங்கப்படவுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

3. சாகித்ய அகடாமியின் நடப்பாண்டிற்கான பால சாகித்ய புரஸ்கார் விருது தமிழில் திரு. விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய ‘ஒற்றைச் சிறகு ஓவியா’ என்ற நாவலுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

4. மாங்கனி கொள்முதல் ஆகஸ்ட் மாதம் வரை நடைபெறும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

5. ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Kushal Dalal** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

கனடாவில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி **Croatia** சென்றடைந்தார்.

**Zagreb** விமான நிலையத்தில் அந்நாட்டு பிரதமர் திரு. **Andrej Plenkovic** திரு. நரேந்திரமோடியை வரவேற்றார்.

இந்திய வம்சாவளியினரும் பெருந்திரளாக விமான நிலையத்தில் கூடி பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

(சவுண்ட் - வரவேற்பு - 20 செகண்ட்ஸ்)

இந்தியப் பிரதமர் ஒருவர் **Croatia-**வுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறையாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜதுரை 18 செகண்ட்ஸ்)

**<<<<<<>>>>>>**

**Fastag** அடிப்படையிலான வருடாந்திர அனுமதிச் சீட்டு, ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி முதல் வழங்கப்படவுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மூவாயிரம் ரூபாய் கட்டணத்தில் வழங்கப்படவுள்ள இந்த அனுமதிச் சீட்டை பயன்படுத்தி 200 பயணங்களை மேற்கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தக பயன்பாடு தவிர்த்த, நான்கு சக்கர வாகனங்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடிகளில் நேர விரயமின்றி பயணத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

சாகித்ய அகடாமியின் நடப்பாண்டிற்கான பால சாகித்ய புரஸ்கார் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழில் திரு. விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய 'ஒற்றைச் சிறகு ஓவியா' என்ற நாவல் இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

மாங்கனிகள் கொள்முதல் ஆகஸ்ட் மாதம் வரை நடைபெறும் என்று வேளாண் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்கே. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாம்பழக் கூழ் உற்பத்திக்கு பெருமளவு பயன்படுத்தப்படும் பெங்களூரா ரக மாம்பழம் கொள்முதல் செய்யப்படாமல், தேக்கமடைந்த சூழல் நிலவியதாக தகவல் கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளிடம் மாநில அரசு பேச்சுவார்த்தை நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

மாம்பழ விவசாயிகளுக்கு லாபம் கிடைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினை முடிவுக்கு வந்துள்ள நிலையில், இதனை எதிர்க்கட்சிகள் அரசியலாக்க முயற்சிப்பதாகவும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

தமிழகத்தில் பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பங்களை அடுத்த மாதம் 2ஆம் தேதிக்குள் அகற்றாவிட்டால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் நேரில் ஆஜராக உத்தரவிடப்படும் என்று சென்னை உயர்நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு விசாரணையின் போது, நீதிபதி திரு. இளந்திரையன் முன்பு தமிழக அரசின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் இதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறை தயாரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

இதனையடுத்து, கொடிக்கம்பங்களை அகற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து அடுத்த மாதம் 2ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறி விசாரணையை நீதிபதி அன்றைய தினத்திற்கு ஒத்தி வைத்தார்.

**<<<<<<>>>>>>**

இனி . . .

மோடி அரசின் 11 ஆண்டுகால சாதனைகள் குறித்து ஆகாஷ்வாணி வழங்கும் செய்தித்தொகுப்பு

## (Sound Byte – Music – 15 Sec)

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதில் இன்று இடம்பெறுகிறது, உலக அளவில் பிரபலமடைந்த நமது பாரம்பரிய கலையான யோகக்கலை குறித்த ஒரு பார்வை.

## (Voice Over / Closing Music – 110 Sec)

*(யோகாவின் வரலாறு என்பது இந்தியாவின் பண்டைக்கால கலாச்சாரத்துடன் ஆழமான தொடர்புடையதாகும்.*

*சிந்து மற்றும் சரஸ்வதி சமவெளி கலாச்சாரத்தின் தொடக்க காலத்தில் யோகா ஒரு ஆன்மீக நடைமுறையாக உருப்பெற்று, சுயஆற்றலை வெளிப்படுத்துவதற்கான ஒழுக்க நெறிமுறையாக, படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது.*

*புத்த மதம் தோன்றிய காலகட்டத்தில் கி.மு 500-ஆம் ஆண்டுவாக்கில், யோகா உருவானதாக அறிஞர்கள் நம்பி வந்தனர்.*

*எனினும், சிந்து மற்றும் சரஸ்வதி சமவெளி நாகரிகம் குறித்து மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம், இதற்கு முந்தைய காலத்திலேயே யோகா தோன்றியதாக தெரியவந்துள்ளது.*

*காலப்போக்கில் யோகா ஒரு ஒழுக்க நெறிமுறையாக வளர்ச்சியடைந்தது.*

*வேதங்கள், உபநிடதங்களிலும் யோகா பற்றிய குறிப்புகள் இருப்பதுடன், பதஞ்சலியிலும் யோக சூத்திரங்களை காண முடிகிறது.*

*மகாபாரதத்திலும் யோகா பற்றிய குறிப்புகள் இடம்பெற்றிருப்பதுடன், சுவாமி விவேகானந்தர் மற்றும் பி.கே.எஸ். ஐயங்கார் போன்ற மகான்கள் இந்த கலைக்கு புத்துயிர் ஊட்டினர்.*

*இதன் காரணமாக, யோகா என்பது பண்டைக்கால பாரம்பரிய முறையிலிருந்து உலகளாவிய ஒழுக்க முறையாக மாற்றமடைந்துள்ளது.*

*2014-ல் ஐ.நா பொதுச்சபையில் உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜூன் 21ஆம் தேதியை சர்வதேச யோகா தினமாக கொண்டாடலாம் என்று முன்மொழிந்தார்.*

*இந்த யோசனை, அமோக ஆதரவுடன் ஏற்கப்பட்டது. அப்போது முதல் ஆண்டுதோறும் ஜூன் 21ஆம் தேதி உலகம் முழுதும் சர்வதேச யோகா தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.*

*11-வது யோகா தினம் இந்த வாரம் கொண்டாடப்படவுள்ள நிலையில், 2025-ஆம் ஆண்டுக்கான யோகா தின மையக்கருத்தான 'ஒரே பூமி – ஒரே ஆரோக்கியத்திற்கு யோகா' என்பது, ஒற்றுமை மற்றும் ஆரோக்கியத்தை வலியுறுத்துவதாக கருதப்படுகிறது.*

*எந்த மதம், இனம் அல்லது நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், ஆரோக்கியமான சமச்சீரான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு யோகா வழிகாட்டுகிறது என்றால் அது மிகையல்ல.)*

**<<<<<<>>>>>>**

நீலகிரி மாவட்டத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 54 செகண்ட்ஸ்)

**<<<<<<>>>>>>**

மாவட்டச் செய்திகள்

அரியலூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு. சி.வி. கணேசன், 4 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

**<<<<<<>>>>>>**

கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகள் மற்றும் அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் திருமதி. அழகுமீனா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

குமார்

வேலூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இந்திய வங்கியின் விரிவாக்கம் செய்யப்பட்ட புதிய கிளையினை மாவட்ட முதன்மை நீதிபதி திரு. முருகன் இன்று திறந்து வைத்தார்.

மோகன்

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Kushal Dalal** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் குழுப் பிரிவிலும் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியில் இந்தியா 3 பதக்கங்களை உறுதி செய்துள்ளது.

-----------

ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 11-3, 11-1, 11-4 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Tomotaka-**வை வென்றார்.

-----------